**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.237/2015**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : தாவூத் உசேன் | **Caste** | : |
| **Father's Name** | : ரசூல் | **Calling** | : சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : மதுரை | **Age** | : **40/2026** |
| | | **Dated** | : **20.05.2026** |

**20.05.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கூடுதல் சாட்சி– 1 **திரு. தாவூத் உசேன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியாற்றிவருகிறேன். வழக்கின் புலன்விசாரணை அலுவலர் காவல் ஆய்வாளர் D.முருகன் பதவி உயர்வு பெற்று வேறுமாவட்டம் சென்றுவிட்டதால் அவரின் கையொப்பம், கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 10.10.2014ம் தேதி திண்டுக்கல் மாவட்ட குற்றப்பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் பிச்சை முகைதீன் நிலைய பொறுப்பில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வரப்பெற்ற புகாரைப்பெற்று வாதி சுருளிராஜ் , த/பெ.சுப்பாநாயுடு, கிழக்கு ஆரோக்கியமாதா தெரு, திண்டுக்கல் என்பவரை விசாரித்து நிலைய குற்ற எண்.114/2014 சட்டப்பிரிவுகள் 406,420, 120(B), 506(I) இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளார். வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் முருகன் வாதி சுருளிராஜ்யை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். வாதிக்கும் எதிரிக்கும் பதியாத கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொடுத்த பத்திர எழுத்தாளர் சரவணவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். எதிரிக்கும் வாதிக்கும் இருந்த பணப்பரிவர்த்தனை மதுரை TVS நகர் இந்தியன் வங்கி கிளை மேலாளர் சுப்பிரமணியன் என்பவரை விசாரித்து ஆவணங்கள் பெற்று வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

விசாரணையில் குற்றத்திற்கு ஒரு நபர் மட்டுமே சம்பந்தப்பட்டது என தெரியவந்ததால் இரண்டாம் எதிரியான சரவணன் என்பவரை நீக்கம் செய்தும் சட்டப்பிரிவு மாறுதல் செய்தும் 406,420, 120(B), 506(I) இதச ல் இருந்து 406,420 இதச ஆக பிரிவு மாற்றம் செய்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த பிச்சை முகைதீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு தனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 406,420 இதச கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும் எதிரி நீக்கம் மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புகார் உரிமையியல் சம்பந்தப்பட்ட பிரச்சனைக்கு காவல் துறையினரின் கலந்த ஆலோசனையின் பெயரில் வழக்கின் தன்மைக்கேற்ப மாறுதல் செய்யப்பட்டு பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிட்டது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. முறையாக புலன்விசாரணை செய்யாமல் ஆய்வாளரால் தவறாக எதிரிக்கெதிராக இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.20 12:44:34 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.237/2015**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சுருளிராஜ் | **Caste** | : |
| **Father's Name** | : சுப்பாநாயுடு | **Calling** | : சுய தொழில் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : கோயம்புத்தூர் | **Age** | : **68/2026** |
| | | **Dated** | : **20.05.2026** |

**20.05.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு. சுருளிராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்சமயம் கோயம்புத்தூரில் குடியிருந்து சுயதொழில் செய்துவருகிறேன். ஆஜர் எதிரி எனது உறவினர். அவரிடம் மதுரை மாடகுளம் உட்கடை பழங்காநத்தம் , கீழக்கரை சர்வே எண்.194/4 ல் 58 சென்ட்ல் கீழ்புறம் 31 சென்ட் , சர்வே எண்.194/3ல் 1 ஏக்கர் 30 சென்ட், மேல்புரம் 69 சென்ட் ஆக 1 ஏக்கரில் பிரிக்கப்பட்ட KP நகர் பிளாக் 2 ல் சுமார் 1404 சதுரடி மனை இடத்தில் அடங்கிய RCC செங்கல் வீடு மற்றும் காலி இடத்தை ரூ.35,00,000/–க்கு கிரையம் பேசி 17.05.2013ம் நாள் ரூ.5,00,000/– ரொக்கமாகவும் 921511 காசோலை மூலம் ரூ.2,00,000/–ம் 921513 காசோலை மூலம் ரூ.10,00,000/–ம் எதிரியின் TVS நகர் இந்திய

வங்கி கணக்கில் 07.03.2013 அன்று ரூ.3,00,000/−ம் ஆக மொத்தம் ரூ.20,00,000/− பணத்தை எதிரியடம் ஒப்படைத்து கிரைய ஒப்பந்த உடன்படிக்கை செய்துகொண்டேன். நான் வங்கியில் லோன் பெருவதற்காக எதிரியிடம் ஆவணத்தை கேட்டபோது ஆவணங்களை தராமலும் எனக்கு கிரையப்பதிவுசெய்து கொடுக்காமலும் காலம் தாழ்த்திவந்தார். அதனால் அவரிடம் பலமுறை கேட்டும் பதிந்துதராமலும் அவரது சொத்தை வேறு ஒரு நபருக்கு விற்பனை செய்தது தெரியவந்தது. அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நடவடிக்கை எடுக்கவில்லை.மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து மாவட்ட குற்றப்பிரிவில் வழக்கு பதிவுசெய்யப்பட்டது. எதிரி எனக்கு தரவேண்டிய பணத்தை தந்துவிட்டார். அதனால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் செய்தபோது சமாதான மனு தாக்கல் செய்துவிட்டோம். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சமானதான மனுவில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது. **சமானதான மனுவில் உள்ள புகார்தாரர் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.03.2013ம் தேதிய கிரைய ஒப்பந்தம் நகல் அ.சா.ஆ.3 ஆகவும், 25.10.2013ம் தேதிய இரண்டாம் எதிரி பெயருக்கு 1ம் எதிரி எழுதிக்கொடுத்த கிரைய பத்திரம் நகல் அ.சா.ஆ.4 ஆகவும் 14.03.2014ம் தேதிய வில்லங்கச்சான்று அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரியிடம் இருந்து நான் கொடுத்த பணத்தை திரும்பி வாங்கிவிட்டேன் என்றால் வாங்கிவிட்டேன். இதே நீதிமன்றத்தில் நான் எதிரி மீது காசோலை வழக்கு தாக்கல் செய்து அதில் சமாதானம் ஆகி நான் முடித்துக்கொண்டேன் என்றால் சரிதான். இருவரும் சமாதானம் ஆகிவிட்டோம். வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.05.20 12:44:40 +0530

Judicial Magistrate No.II
Dindigul.